**பாதுகாப்பு அமைச்சு**

# இலங்கை பொலிசில் சேவையை விட்டுச்சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்தல்.

இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக மிகத் துணிவுடன் கடமையை மேற்கொள்வதற்கு பங்களிப்பு செய்வதற்காக தற்போது சேவையிலிருந்து விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள இலங்கை பொலிசில் (விசேட அதிரடிப் படையினர் உள்ளடங்களாக) உத்தியோகத்தர்களினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் முறையீடுகளை கருத்திற் கொண்டு அவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதை பரீசீலனை செய்வதற்காக 2020.02.19 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கிணங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலோடு சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள முறையான மற்றும் திறந்த நடவடிக்கை மூலம் மூவரடங்கிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தற்போது வரைக்கும் சேவையை விட்டுச் சென்றதற்கான கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக ஆய்வானது கீழுள்ள நிபந்தனைகள் அடிப்படையில் நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

- 2009.06.01 ஆம் திகதிக்கு பின் சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

    i. 2020.01.01 ஆம் திகதியன்று 50 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

    ii. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள காலப்பகுதியில் நடாத்தப்படும் பின்புலன் விசாரணை மற்றும் மீண்டும் சேவையில் இணைத்துகொள்வதற்காக தகுந்த சிறந்த மனநிலை மற்றும் ஆரோக்கியமான நிலைமைகளில் உள்ளாரா என உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் வைத்தியசாலையில் பிரதான வைத்திய அதிகாரி மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைக்கு சமூகமளித்தல் வேண்டும்.

    iii. வைத்திய பரிசோதனையின் போது பொலிஸ் வைத்திசாலையின் பிரதான வைத்திய அதிகாரி அவர்களினால் குறித்த உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தகுதியானவர் என உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் பின்புலன் அறிக்கை மீண்டும் குழுவிற்கு வைக்கப்பட்டதன்

பின்னர் குழுவால் இறுதி தீர்மானம் எடுக்கப்படும். அதுவே இறுதி தீர்மானமாக அமையும்.

iv. அவ்வாறு மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரினால் உட்படுத்தப்படும் ஒரு மாதத்திற்கு குறைவான மீள் பயிற்சிக்கு உற்படுத்தப்படுவதுடன் பொலிஸ் மா அதிபரினால் பரிந்துரைக்கப்படும் பிரதேசத்தில் குறைந்தது 03 வருடங்கள் சேவையாற்ற வேண்டும். அக்கால வரையரைக்குள் இடமாற்றம் எதிர்பார்ப்பதாயின் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்தல் வேண்டும்.

v. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளும் போது அவர்களது சம்பள திட்டமானது தாபன சட்டக் கோவையின் முதலாவது பிரிவின் VII பந்தியின் 8:1 பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வகித்த பதவியின் அடிப்படை சம்பளத்திற்கு அமைவாகும்.

vi. இவ்வாறு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் சம்பந்தமாக அவர்களது முழுமையான சேவையிலிருந்த காலம் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படும்.

- 2009.06.01 திகதிக்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.
  மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகள் உட்பட்டதாகும்.

i. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறுவதற்கு முன்னர் உள்ள சேவைக்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் (செயற்பாட்டுப் பிரதேசத்தில்) குறைந்தது ஒரு வருடமாவது சேவை செய்திருத்தல் வேண்டும்.

ii. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள முன்னைய சேவைக்காலம், 2020.01.01 திகதிக்கு கணக்கிடப்படும் சேவையில் இல்லாத காலத்தை விட அதிகம் இருத்தல் வேண்டும்.

தற்போதைக்கு சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது முறையீடுகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைய கீழுள்ள முகவரிக்கு 2020.07.17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கையளித்தல் அல்லது மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பி வைக்கவும்.

மேலதிக செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு (சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவு)
14 வது மாடி, “சுஹுருப்பாய” ,
பத்தரமுல்லை
மின்னஞ்சல் முகவரி - adlseclaw1@defence.lk

கடித உரையின் இடப்பக்க மேல் மூலையில் “**மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளல் - 2020**” எனக் குறிப்பிடுவது அவசியமாகும்.

இது சம்பந்தமான தகவல்களை www.defence.lk அல்லது www.police.lk என்ற இணையத்தள முகவரியினூடாக மற்றும் காரியாலய நேரத்தில் இலக்கம் 011-2887884 என்ற தொலைபேசினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு ,
இலக்கம் 15/05,
பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு - 03
2020.06.17

**இலங்கை பொலிசில் சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்து கொள்ள பரிசீலனை செய்யப்படுவதற்கான மாதிரி விண்ணப்பம்.**

01. மேல்முறையீட்டாளரின் பெயர் -

02. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்ட போது வகித்த பதவி மற்றும் பதவி இலக்கம் -

03. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்ட போது கடமை புரிந்த,

   i. பொலிஸ் பிரிவு -

   ii. பொலிஸ் நிலையம் /பிரிவு/ பணியகம் -

04. பிறந்த திகதி -

   i. தனிப்பட்ட முகவரி -

   ii. தொலைபேசி இலக்கம் -

05. சேவையில் இணைந்த திகதி -

06. சேவையை விட்டுச் சென்ற திகதி -

07. சேவையை விட்டு சென்ற கட்டளை பெறப்பட்ட போது சேவைக்காலம் - வ ☐ மா ☐ தி ☐

08. 2020.01.01 திகதிக்கு வயது - வ ☐ மா ☐ தி ☐

09. இதற்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டிருந்தால்,

   i. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெற்ற திகதி -

   ii. மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்ட திகதி -

10. சேவையை விட்டுச்சென்ற கட்டளை பெறப்பட்டிருந்த காலப்பகுதினுல் வசித்த நிரந்தர - தற்காலிக முகவரிக்குறிய பொலிஸ் பிரிவு உள்ளடங்களாக

| நிரந்தர /தற்காலிக முகவரி | பொலிஸ் பிரிவு | வசித்த காலம் |
|---|---|---|
| | | |

11. சேவையை விட்டுச் சென்ற கட்டளை பெறப்பட்டிருந்த காலத்தினுள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி இருந்தீர்களா / இல்லையா என்பது தொடர்பாக (அனைத்து விடயங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்)
12. சேவையை விட்டுச்சென்ற கட்டளைக்கு எதிராக மேல் முறையீடு ஏதேனும் செய்திருப்பின் அது தொடர்பான விளக்கம்.

| மேல் முறையீடு செய்த திகதி | மேல் முறையீட்டை விசாரித்த உத்தியோகத்தரின் தீர்மானம் |
|---|---|
| | |

13. சேவையை விட்டுச் சென்றமைக்கான காரணம் (குறிப்பிட்ட காரணங்களை விளக்கமாக சாட்சியுடன் குறிப்பிடுதல் வேண்டும்.

சேவையை விட்டு சென்ற கட்டளை பெறும் முன்னர் செயற்பாட்டுப் பிரதேசங்களில் சேவையாற்றியிருப்பின் அது தொடர்பான விளக்கம்.

செயற்பாட்டு பிரதேசம் சேவைக் காலம்

(1) ........................... திகதியிலிருந்து .................................................... வரை

(2) ........................... திகதியிலிருந்து .................................................... வரை

மேற் குறிப்பிட்ட விடயங்கள் எனது அறிவிற்கமைய சரியானது என்றும் உண்மையானது என்றும் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான தீர்மானம் கிடைக்கப் பெற்றால் அந்த மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படுவதுடன், ஏதேனும் பொய்யான தகவல்களை முன்வைத்ததாக நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தகுதியற்றவர் என்பதனை நான் அறிந்து கொண்டுள்ளதாகவும் இத்தால் அறிவத்தல் செய்கின்றேன்.

....................................................................... ................................

மேல் முறையீடு செய்த உத்தியோகத்தரின் பெயர் மற்றும் கையொப்பம் திகதி